


## பாமாலை 421 மெய்த் தேவனைத் துதி

1 மெய்த் தேவனைத் துதி பேர் நன்மை
செய்தார்

குமாரனைத் தந்துன்னையே நேசித்தார்

உன் பாவத்துக்காக யேசு மரித்தார்

நீ ஜீவனைப் பெற ஆருயிர் தந்தார்

**Refrain**

போற்றுவோம் போற்றுவோம் ஜீவ நாயகரை

நம்புவோம் நம்புவோம் லோக ரட்சகரை

ஓ யேசுவின் மூலம் நற்கதி உண்டாம்

பிதாவின் சமூகம் கண்டடையலாம்

2 சம்பூரண மீட்பை சம்பாதித்தனர்

தம் வாக்கை அன்பர்க்கருள்வேன் என்றனர்

எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்

அந்நேரமே மன்னிப்புண்டாம் ஏசுவால்

3 அதிசயமான அன்பின் பெருக்கே

ஏசுவினாலே வரும் மகிழ்ச்சியே

அந்நாளில் யேசுவை நான் பார்க்கும் போது

உண்டாகும் மகிழ்ச்சிக்கு வரம்புண்டோ